DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.240/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | சுகண்யா (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 17.03.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், கதிரநல்லூர், 7/28, தோப்புபட்டியில் குடியிருந்து சேந்தமங்கலம் கனரா வங்கியில் மூத்த மேலாளராக வேலைசெய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். **(**சாட்சி எதிரியை அடையாளம் காட்டினார்**.)** ஆஜர் எதிரி என்னுடன் பள்ளியில் ஒன்றாக படித்தவர் எனக்கு தெரியும். அவர் கடந்த 2020ம் ஆண்டில் இருந்து என்னை திருமணம் செய்துகொள்ள எனது பெற்றோர் மற்றும் என்னிடம் கேட்டு வந்தார். நாங்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தும் ஆஜர் எதிரி தொடர்ந்து என்னை தொந்தரவு செய்து வந்தார்.

இந்நிலையில் கடந்த 04.10.2024ம் தேதி எதிரி எனது கேபினுக்குள் நுழைந்து பிரச்சணை செய்தது சம்மந்தமாகவும் பின்பு 08.10.2024ம் தேதி எதிரி அரசமர பேருந்து நிறுத்தத்தில் என்னிடம் பிரச்சணை செய்தது சம்மந்தமாகவும் நான் சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். அதற்கு பின்னிட்டு கடந்த 29.05.2025ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் ஆஜர் எதிரி நான் பணிபுரியும் வங்கிக்கு வந்து என்னிடம் பேச எனது கேபினுக்குள் வந்தார். நான் அவரை என்னுடன் பேசவேண்டாம் என்றும் அவ்வாறு பேசும் பட்சத்தில் நான் போலிசுக்குதான் கால் செய்வேன் என

கூறினேன். பின்பு அவர் அங்கு இருந்து சென்றுவிட்டார். மேற்படி சங்கதியை நான் எனது பெற்றோரிடம் தெரிவித்திருந்தேன்.

பின்னிட்டு அடுத்த நாள் 30.05.2025ம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி தோப்புப்பட்டியில் உள்ள எனது வீட்டிற்கு வந்தார். அப்போது எனது பெற்றோர் ஆஜர் எதிரியை வாசலில் நிறுத்தி முந்தைய நாள் என்னிடம் ஆஜர் எதிரி பிரச்சனை செய்ததால் அவரை அங்கு இருந்து செல்லுமாறு கூறிவிட்டனர். ஆஜர் எதிரி அங்கு இருந்து சென்றுவிட்டார்.

பின்னிட்டு அடுத்தநாள் 31.05.2025ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் ஆஜர் எதிரி நான் பணிபுரியும் வங்கிக்கு வந்து வாடிக்கையாளர் இருக்கையில் அமர்ந்துகொண்டார். நான் உடனடியாக காவல்நிலையத்திற்கு போன் செய்து தகவல் தெரிவித்துவிட்டு நான் எனது கேபினுக்குள் சென்று வாடிக்கையாளர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி திடீர் என்று எனது கேபினுக்குள் நுழைந்து வாடிக்கையாளர் முன்பே எனது கையை பிடித்தார். அவர் உள்ளே நுழைவதை பார்த்த உடனேயே நான் பெல்லை அடித்து அட்டன்டர் சாந்தகுமாரை அழைத்தேன். அப்போது சாந்தகுமார் உள்ளே வந்து எதிரியை அங்கு இருந்து அழைத்து சென்றுவிட்டார்கள். இது குறித்து நான் சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(**புகார் மனு அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(எதிரி தரப்புக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**